# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 2453 / 2010 / எம்சி. 8 நாள் : 15.3.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 2010-11ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை - சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2010-11ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் வருகின்ற 22.3.2010 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம்
## மார்ச் 2010

### நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | கோயம்புத்துார் மாநகராட்சி – மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி - 2009-10ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் 2010-11 ம் நிதி ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட மதிப்பீடு - நிதிநிலை அறிக்கை சமா்ப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்**
**போற்றி வழங்கு நெறி.**

(குறள் -477)

**விளக்கம்**

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

திருவள்ளுவர்.

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2009-2010 ம் ஆண்டு திருத்திய மதிப்பீடும் 2010-2011 ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய திட்ட வரவு செலவு மதிப்பீடும் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைத்தல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2009-2010ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2010-2011ம் ஆண்டிற்கான பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய திட்ட வரவு செலவு மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவுள்ள பணிகளுக்கான வரவு, செலவு அறிக்கையும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையுடன் (வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 44 நாள் 11.03.2010) மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அங்கீகரிக்கலாம். ந.க.எண் 612/2010/பி1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.284 நாள்.23.3.2010</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி